08.07.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஓ.எஸ்.எண். 35 /2022 ) திருமதி.சந்திரா.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> -

1) சுடலைமாடி என்ற சொள்ளமாடியின் வாரிசு எனது தந்தை சண்முகம் என்பதை காட்டுவதற்கு வாரீசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் 4 வது பக்கத்தில் வாதிகள் அனைவரும் ஸ்ரீலங்கா நாட்டிலிருந்தோம் 1982 ல் தான் இந்தியாவிற்கு திரும்பி வந்தோம் என்றால் சரிதான். நான் எனது சகோதர, சகோதரிகள் பிறந்தது ஸ்ரீலங்கா நாட்டில் தான் என்றால் சரிதான். நான் பிறந்த வருடம் 1978 என்றால் ஆமாம். சுடலைமாடி வழக்கு சொத்தினை இராமையன் என்பவருக்கு 09.05.1953 ல் அடமானம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். இராமையன் 19.03.1957 ல் சூரண் என்பவருக்கு அடமான மேடோவர் எழுதிக்கொடுத்துள்ளாா என்றால் சரிதான். அடமானத்தொகையை செலுத்தி சுடலைமாடி மீட்டுவிட்டார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல்செய்யவிலலை என்றால் சரிதான். சுடலைமாடி எந்த வருடம் இறந்தார் என்றால 1979 ல் இறந்துபோனார். சுடலைமாடி, சூரனுக்கு அடமானத்தொகையை செலுத்த முடியாமல் கிரையமாக கொடுத்துவிட்டார் என்றால் கொடுக்கவில்லை நாங்கள் இலங்கையிலிருந்து வந்ததால் அந்த காட்டை பெரியவர்கள் பஞ்சாயத்து பேசி திருப்பிக்கொடுத்துவிட்டார்கள் ரூ.300/- கட்டுக்குத்தகையாக அவர் பயிர் செய்தார் பின்னர் நான் 44 வருடங்கள் பயிர் செய்தேன். பெரியவர்கள் பேசி சூரண் காட்டை மீண்டும் எங்களிடம் திருப்பிக்கொடுத்துவிட்டதாக எனது பிராதில் இதுபற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பா சண்முகம் எப்போது இறந்தார் என்றால் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் 20.05.2018 ல் இறந்துவிட்டார். வழக்கு சொத்திற்கு எனது பெயரிலும், எனது சகோதரர் பெயருக்கோ பட்டா இல்லை என்றால் சரிதான் எனது அப்பா பெயரில் உள்ளது. எனது அப்பா சண்முகம் பெயருக்கு தவறுதலாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பாவுக்கும், சுடலைமாடிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றுசொன்னால் சரியல்ல. சொத்துக்களை இராமச்சந்திரன் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் கடந்த 3 வருடங்களாக அனுபவம் செய்து வருகிறார்.

2) வழக்கு சொத்தினை எனது தந்தை அதன் பின்னர் நாங்கள் அனுபவம் செய்து வந்ததை காட்டுவதற்கு தீர்வை ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஒரு

வருடத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். தீர்வை ரசீது தாக்ல செய்ததாக சொல்லுவது பொய் என்றும் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 அடங்கல் பதிவேடு கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய ஆவணம் வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுடலைமாடி கிரையம் பெற்ற அசல் கிரைய ஆவணம் தாக்கல் செய்யவில்லை நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அடமான ஆவணம், அடமான மேடோவர் ஆவணம் அசல் தாக்கல் செய்யவில்லை நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் அசல் ஆவணம் ஏன் தாக்கல் செய்யவில்லை என்று எனது வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எனது தந்தைக்கும், எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
08.07.2025.